செய்தி வெளியீடு எண் :1547 நாள் : 02.08.2023

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் இன்று (02.08.2023) நடைபெற்றது.**

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு.சிவ் தாஸ் மீனா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வடகிழக்குப் பருவமழைக்கு முன்பாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகள் தொடர்பாக பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிருவாகத்துறை, நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத் துறை, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் கண்காணிப்பு அலுவலர்கள், மண்டல அலுவலர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் இன்று (02.08.2023) நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வடகிழக்குப் பருவமழைக்கு முன்னதாக முடிக்கப்பட வேண்டிய பணிகள் குறித்தும், தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தும் தலைமைச் செயலாளர் அவர்கள் ஆய்வு செய்தார்.

**இந்த ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:**

தற்பொழுது சென்னை பெருநகர மாநகராட்சி, தாம்பரம் மாநகராட்சி மற்றும் புறநகர் பகுதிகளிலும், கடலூர், தூத்துக்குடி உள்ளிட்ட பிற மாவட்டங்களில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக முழுமையாக முடித்திட வேண்டும். மாநகராட்சிக்குட்பட்ட நீர்நிலைகளிலும், நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆறுகள், கால்வாய்களிலும் ஆகாயத் தாமரைகளை அகற்றி தூர்வாரும் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு முடித்திட வேண்டும். மழைநீர் வடிகால்களில் படிந்துள்ள மண் துகள்களை முழுமையாக அகற்றிட வேண்டும். இப்பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். மழைநீர் வடிகால்வாய் பணிகளை தொடர்புடைய அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து தொடர்கண்காணிப்புடன் மேற்கொள்ள வேண்டும்.

மழைநீர் வடிகால் அமைக்கப்படும் இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்திட வேண்டும். பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நெடுஞ்சாலைத்துறை, நீர்வளத்துறை, மின்துறை உள்ளிட்ட தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து பணிகளை மக்களுக்கு எவ்வித பாதிப்பும் இன்றி துரிதமாக மேற்கொள்ள வேண்டும். மழைநீர் வடிகால்வாய்

மற்றும் சேவைத்துறைகள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்களில் சாலைப் பணிகளை தரமாகவும், விரைவாகவும் மேற்கொள்ள வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.2,325 கோடி மதிப்பீட்டில் 738.22 கி.மீ. மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. வடசென்னை பகுதியின் கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகள் ஆசிய வளர்ச்சி வங்கியின் (ADB) நிதியின் கீழ்:– 769 கி.மீ. நீளத்திற்கு ரூ. 3,220 கோடி மதிப்பில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில். இதுவரை 483.83 கி.மீ நீளத்திற்கு பணிகள் நிறைவடைந்துள்ளன. தென்சென்னை பகுதியின் கோவளம் வடிநிலத்தில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளுக்கு KfW என்ற ஜெர்மன் நாட்டு வங்கி நிதியில் ரூ.1,714 கோடி மதிப்பீட்டில் M1, M2 மற்றும் M3 மூன்று கூறுகளாக மேற்கொள்ள ஒப்புதல் பெறப்பட்டது.

இரண்டு கட்டங்களாக, எம்1 தொகுப்புத் திட்டத்தில் 160.83 கி.மீ. நீளத்திற்கு ரூ.597.48 கோடி மதிப்பீட்டில் 12 சிப்பங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன .இதுவரை 21.82 கி.மீ நீளத்திற்கு பணிகள் நிறைவடைந்துள்ளன.

2023ம் ஆண்டின் பருவமழையை எதிர்கொள்ள 15 மண்டலங்களில் உள்ள மழைநீர் வடிகால்வாய்களை தூர்வரும் பணி மற்றும் சிறு பழுதுபார்க்கும் பணிகள் ரூ.27.55 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப்பணிகள் வடகிழக்கு பருவமழை காலத்திற்கு முன் முடிக்கப்பட வேண்டும்.

மேலும், மழைநீர் வடிகால் பணிகளைத் தாமதமாக மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு நோட்டீஸ் வழங்கி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மழைநீர் வடிகால் முடிக்கும்போதே வண்டல் வடிகட்டித் தொட்டிகளும் கட்டி முடித்திட வேண்டும். மழைநீர் இணைப்புகள் முடிக்காத இடத்தில் தனிக்கவனம் செலுத்தி இப்பணிகளை மேற்கொண்டு முடித்திட வேண்டும். மழைநீர் தேங்கும் பகுதிகளாக கண்டறியப்பட்ட இடங்களில் அதனைச் சரிசெய்திடவும் வகையிலான பணிகளை மேற்கொள்ள வேண்டும். மழைநீர் வடிகாலில் மழைநீர் வழிந்தோடும் வகையில் உரிய சாய்வுடன் ( Slope ) அமைத்திட வேண்டும். மழைநீர் வடிகால்வாய் நடைபெறும் இடங்களில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் உள்ளிட்ட அனைத்து நீர்வழித்தடங்களிலும் ஆகாயத்தாமரைகளை அகற்றி தூர் வாரிட வேண்டும். வடகிழக்குப் பருவமழைக்கு முன்பாக மழைநீர் வடிகால் பணிகளை முடித்திட வேண்டும்.

குடிநீர், கழிவுநீர் மற்றும் மின்சார வாரியப் பணிகள் போன்ற சாலை வெட்டுக்களை உடனுக்குடன் சீர்செய்ய வார்டு வாரியாகவும், மண்டல வாரியாகவும், தலைமையிடத்திலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு பணியாற்றிட வேண்டும். மழையினை தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், தொடர்புடைய

அனைத்து துறை அலுவலர்களும் மேற்கொள்ள வேண்டும். அலுவலர்கள் முழுமையான கண்காணிப்புடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், மழைநீர் வடிகால் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள், பொதுமக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறின்றி தகுந்த தடுப்புகள் அமைத்து உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டும். மேலும், பணி நடைபெறும் இடங்களில், அங்கு வசிப்பவர்களிடம் பணியின் விவரங்கள் தெரியப்படுத்துவதுடன் அது துவங்கும் நாள் மற்றும் முடியும் காலத்தை தெரிவிக்க வேண்டும். அனைத்து முன்னுரிமை பணிகளும் செப்டம்பர்–15க்குள் முடிக்கப்பட வேண்டும் என்று பேசும்போது தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை ஆணையர் திரு.எஸ்.கே.பிரபாகர், இ.ஆ.ப., நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ஆர்.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி கண்காணிப்பு அலுவலர்கள் (Monitioring Officers), மண்டல அலுவலர்கள் (Zonal Officers) மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in